# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.2/2020.
Prosecution witness for P.W.12 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. பேச்சியம்மாள். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.01.2026.

A1,8,10,19 died. A3 and 14 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோமஸ்புரத்தில் குடியிருந்து வீட்டோடு இருந்து வருகிறேன். இறந்துபோன முத்துக்குமார் என் கணவர். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. என் கணவர் எப்படி இறந்தார் என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 23.01.2017 அன்று மாலை 6 மணியளவில் புதுார்பாண்டியாபுரம் சுங்கச் சாவடி அருகில் உள்ள என் கணவர் நடத்தி வரும் சிவசக்தி லாரி செட் முன்பாக என் கணவரும், முனியசாமி என்பவரும் பேசிக் கொண்டிருந்தபோது தேர்தல் முன்விரோதம் காரணமாக ஏற்கனவே நடந்த கணேசன் மற்றும் கொடிகாட்டு ராஜா ஆகியோர் கொலையின் முன்விரோதம் காரணமாக எதிரிகள் அரிவாள் மற்றும் வாள்

ஆகியவற்றால் மேற்படி இருவரையும் வெட்டி கொலை செய்ததாகவும், அதை தெரிந்து நான் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்குச் சென்று என் கணவரின் உடலை பார்த்ததில் அவருக்கு உடல் முழுவதும் வெட்டுக்காயங்கள் இருந்ததாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.09 18:53:14 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.2/2020.
Prosecution witness for P.W.13 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. முருகன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.01.2026.

A1,8,10,19 died. A3 and 14 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது புதுார்பாண்டியாபுரத்தில் குடியிருந்து பெட்ரோல் நிலையத்தில் வேலை செய்து வருகிறேன். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு புதியம்புத்துார் காவல்நிலையத்திற்கு நான் சென்றிருந்தபோது போலீசார் வெற்றுத்தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 2 முதல் 4**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 23.01.2017 அன்று இரவு 21.15 மணியளவில் நானும், தங்கமாரியப்பன் என்பவரும் புதுார்பாண்டியாபுரம் சிவசக்தி லாரி செட் அருகில் வந்து கொண்டிருந்தபோது போலீசார் சம்பவ இடத்தை

பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தபோதும், சம்பவ இடத்திலிருந்து முனியசாமி பிரேதத்தின் அருகில் ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண் ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றும்போதும், பின்னர் 23.15 மணியளவில் சம்பவ இடத்தின் அருகில் முத்துக்குமார் இறந்துகிடந்த இடத்தில் ரத்தம்பட்ட மண், ரத்தம்படாத மண் ஆகியவற்றை போலீசார் மகஜரில் கைப்பற்றும்போதும் நாங்கள் உடனிருந்து அந்த மகஜர்களில் கையொப்பமிட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது ஆஜர் எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.09 18:53:21 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.